**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**
**முன்னிலை – திரு.பி.எஸ். ரஸ்கின்ராஜ், பி.ஏ.,எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.**
**2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10–ம் நாள் புதன்கிழமை**
**I.A.No.1/2025 in A.S. 7 / 2024**

1. C.O. பாண்டி

2. M. விக்டோரியா

.....மேல்முறையீட்டாளர்கள் / 2, 3 பிரதிவாதிகள்

/ எதிர் /

1. ஜெயக்கொடி ......எதிர்மனுதாரர் / வாதி

2. பெரியகருப்பன் ......எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி

இம்மனு என் முன்பு 20.11.2025–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்து மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.V.K.ஜெயச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கணபதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.பார்த்திபன் அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாததால் அவர் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டு இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு

இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்........

**உத்தரவு**

இம்மனுவானது மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் Under Order 41 Rule 27 CPC–ன் படி தாக்கல் செய்யயப்பட்ட மனுவாகும்.

**1. மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் / மேல்முறையீட்டாளர்கள் அசல் வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் ஆவார்கள். தாவா அசல் வழக்கானது, எதிர்மேல்முறையீட்டாளர் / வாதியால் கடந்த 17.06.2009–ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என விளம்புகை செய்தும், அதன் அடிப்படையில் 01.12.2010–ம் தேதி 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் செல்லாநிலையிலானது என விளம்புகை பரிகாரம் கோரியம் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகளால் தபசில் சொத்திற்குரிய அ பதிவேடு, பட்டா, அடங்கல் பதிவேடு ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. ஆகவே, இந்த மேல்முறையீட்டீல் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும். மேற்படி ஆவணங்கள் பெரியகருப்பத்தேவர் பெயரிலுள்ள அ பதிவேடு, சிட்டா மற்றும் அடங்கள் பதிவேடு ஆகும். எனவே மனுவை

அனுமதிக்க கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிருரையின் சுருக்கம்:–**

அசல் வழக்கு எண். 103 / 2012–ல் கடந்த 29.04.2024 அன்று முழுமையான விசாரணைக்கு பிறகு வாதி கோரிய பரிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகள் என்ன காரணத்திற்காக மேற்படி ஆவணங்களை இந்த மேல்முறையீட்டில் குறியீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என மனுவில் குறிப்பாக குறிப்பிடவில்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கிடை சொத்து வாதிக்கு கிரைய பாத்தியப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு கூடுதல் பதிலுரையில் மறுத்துள்ளார்கள். விசாரணை நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் ஆவண சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை. மேற்படி எந்த மேல்முறையீடும் இன்றி இந்த மேல்முறையீட்டில் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என கூறுவது அனுமதிக்கத்தக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிர்மனுதாரர்களால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

*3.1.* மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டியுள்ள ஆவணங்கள் தாவா வழக்கு சொத்திற்குரியதா? மேற்படி ஆவணங்கள் தாவா சொத்தில் மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை தெளிவுபடுத்த போதுமானதாக அமையுமா? மேற்படி ஆவணங்கள் ஏன்? மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகளால் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்பதை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

*3.2.* அடுத்ததாக, எதிர்மேல்முறையீட்டாளர் / வாதி வழக்கிடை சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோராமல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தையும் அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தையும் செல்லாநிலையிலான ஆவணம் என விளம்புகை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளார். தாவா சொத்து வாதியின் தகப்பனாரைப் பெற்ற தாத்தா வெயிலாதேவருக்கு குடும்ப பாகபிரிவினையின் போது கிடைக்கப்பெற்று அவர்

பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. பின்னர் வாதியின் தந்தை ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்டு அவர் காலத்திற்கு பிறகு வாதிக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்து விபரமானது, **மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, செட்டிக்குளம் கிராமம் பட்டா எண். 26 சர்வே எண். 339/1பி–ல் 61 3/4 செண்ட்** ஆகும். வாதி விசாரணை நீதிமன்றத்தில் வாதியின் தாத்தா பெயரிலுள்ள சிட்டாவை வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். அதனை பரிசீலனை செய்யும் போது முருகபாண்டி உட்பட 11 பெயர்களுக்கு கூட்டு பட்டாவாக உள்ளது. விஸ்தீரணத்தில் முரண்பாடு உள்ளது. பட்டா எண். 26 ஆனது, சர்வே எண். 339/1பி ஆக காட்டப்பட்டுள்ளது. ஆக, மேற்படி வா.சா.ஆ.1 பட்டா, சிட்டாவை தவிர தாவா சொத்து சம்பந்தமாக வாதிக்கு மூல ஆவணங்கள் இல்லை. அதனைத் தொடந்து அசல் வழக்கு எண். 186 / 11–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை வா.சா.ஆ.5–யை பரிசீலனை செய்யும் போது வாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு தாவா சொத்தான சர்வே எண். 339 / 1பி–ல் கட்டுப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதி வாதிக்கு உரிமைப்பட்டதாக கூறி சமரசம் செய்துள்ளதாக வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் தெளிவுபடுத்துகிறது. மேற்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை தாவா வழக்குரையில் அசல் வழக்கு எண். 186 / 2011 தனக்கு

சாதகமாக தீர்ப்பாகியுள்ளதாகவும், 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கை நடத்தாமல் சமரசமாகியுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆக, 1ம் பிரதிவாதி தனக்குள்ள உரிமையை வாதிகளுக்கு அசல் வழக்கு எண். 186 / 2011–ல் விட்டுகொடுத்துள்ளார். தற்போது விசாரணை நீதிமன்றத்தில் பிரதிவாதிகளின் தாத்தா பெரியகருப்பத்தேவர் பெயரிலுள்ள அ பதிவேடு, சிட்டா, அடங்கல் பதிவேடு ஆகியவற்றை தாக்கல் செய்ய வேண்டும் என கூறுவது ஏற்புடையது அல்ல. தாவா வழக்கில் 1ம் பிரதிவாதி தனக்குரிய உரிமையை அசல் வழக்கு எண். 186 / 2011–ல் விட்டுக் கொடுத்துள்ளார். தற்போது 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரிலுள்ள பட்டா, சிட்டா, அடங்கல் பதிவேடு ஆகியவற்றை தாக்கல் செய்ய வேண்டும் என கூறுவது ஏற்புடையது அல்ல என்பதாகும்.

***3.3.*** அடுத்ததாக, மேற்படி அசல் வழக்கு எண். 186 / 2011–க்கு கடந்த 10.01.2012–ல் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாகவே, கடந்த 17.06.2009–ல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் பதிந்து கொடுத்துள்ளார். அதுபோன்று 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு 01.12.2010 அன்று கிரையம் கொடுத்துள்ளார். அசல் வழக்கு எண். 186 / 2011–ல் 1ம் பிரதிவாதி வாதியுடன் சமரசமாகப் போகும்போது

தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை. ஆக, அசல் வழக்கு எண். 186 / 2011–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சட்டப்படியான தீர்ப்பணையா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாக உள்ளது. விசாரணை நீதிமன்றம் 1ம் பிரதிவாதியின் வாய்மொழி சாட்சியத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு அசல் வழக்கு எண். 186 / 2011–ல் 1ம் பிரதிவாதி தனக்குரிய உரிமையை வாதிக்கு விட்டுக் கொடுத்துள்ளார். அதற்கு எதிராக எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை. ஆகையால், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரைய ஆவணமும், 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரைய ஆவணமும் செல்லாநிலையிலானது என தீர்மானித்து வாதிகளின் வழக்கை அனுமதித்தது ஏற்புடையதா? என பரிசீலனை செய்ய வேண்டிள்ளது. வழக்கிடை சொத்து சம்பந்தமாக வாதி பெயரிலோ அல்லது வாதியின் தாத்தா பெயரிலோ, வாதியின் தகப்பனார் பெயரிலோ தனிப்பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை. தற்போது இந்த மேல்முறையீட்டில் 2, 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான பெரியகருப்பன் பெயரிலுள்ள பட்டா பசலி மற்றும் அடங்கல் பதிவேடு ஆகியவை 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரிலுள்ள ஆவணங்கள் ஆகும். ஆக, மேற்படி ஆவணங்களை இந்த மேல்முறையீட்டில் குறியீடு செய்தால் தான்

வழக்கின் உண்மைத் தன்மையை தீர்மானிக்க முடியும். மேலும், விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கை அனுமதித்தது ஒருதலைப்பட்சமானதா? அல்லது இல்லையா? என்பதை தீர்மானிக்க முடியும். இதுசம்பந்தமாக கீழ்காணும் முன்னோடி தீர்ப்புரை,

**Citation : CDJ 2025 MHC 3267**

**Court : High Court of Judicature at Madras**

**Case No. C.R.No. 2802 of 2022 and CMP.No. 1505 of 2022**

**Judges : THE HONOURABLE MR.JUSTICE N. SATHISH KUMAR**

**Parties : Suithra Bhai Versus K. Venkopa Rao**

Challenging the order of the appellate court rejecting the application filed under Order 6 Rule 17 of CPC for amendment seeking relief of declaration, the present revision has been filed.

There is no impediment or bar against an appellate court permitting amendment of pleadings so as to enable a party ot raise a new plea. All that is necessary is that the appellate court should observe the well known principles subject to which amendments of pleadings are usually granted. Naturally one of the circumstances which will be taken into consideration before an amendment is granted is the delay in making the aplication seeking such amendment and if made at the appellate stage, the reason why it was not soughtin the trial court. If the necessary material on which the plea arising from the amendment may be decided is already there, the amendment may be

more redily granted than otherwise. But there is no prohibition against an apellate court permittion an amendment at the appellate stage merely because the necessary material is not already before the court.

With regard to the amendment of the suit for the claims which are time barred can be allowed in the interest of justice and the issue of limitation can be framed separately for deciding is concerned, the Hon'ble Supreme Court in the case of life Insurance Corporation of Inida Vs Sanjeev Builders Private Limited and another reported in (2022) 16 SCC 1 has held as follows:

மேற்படி முன்னோடி தீர்ப்புரை இம்மனுவின் பொருண்மைக்கு பொருத்தமாக உள்ளது. ஆகவே, மேல்முறையீட்டாளர்களுக்கு அவர் பக்க நியாத்தை நிருபிப்பதற்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும் என முன்னோடி தீர்ப்புரை தெளிவுபடுத்துவதால் இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்ததாக இருக்கும் என கருதி இம்மனு அனுமதிக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ஆம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.12.10 16:54:18 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**குறியீடு செய்ய வேண்டிய ஆவணங்கள்:-**

1. பெரியகருப்பத்தேவர் பெயரிலுள்ள பட்டா.
2. பெரியகருப்பத்தேவர் பெயரிலுள்ள பசலி.
3. பெரியகருப்பத்தேவர் பெயரிலுள்ள அடங்கல்.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.12.10 16:54:29 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

I .A.No.1/ 2025 in

A.S.7 / 2024

நேரிய / வரைவு / உத்தரவு

10.12.2025